தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மல்பரி செடிகளில் விவசாயக் கல்லூரி மாணவிகள் ஆய்வு

போடி பகுதியில், மல்பரி செடிகளில் விவசாயக் கல்லூரி மாணவிகள் ஆய்வு மேற்கொண்டனர்.மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பயிலும் மாணவிகள் ஹேமாவதி, இத்திஸ்ரீ, கலைவாணி, கலாமணி, கார்த்திகா, கார்த்திகேயனி, மீனா, மீனாப்பிரியா ஆகிய மாணவிகள், போடி அருகே மல்பரி செடிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.போடி அருகே உள்ள பெருமாள்கவுண்டன்பட்டி கிராமத்தில் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மல்பரி தோட்டங்களை இம்மாணவிகள் பார்வையிட்டு, விவசாயிகளிடம் விளக்கம் பெற்றனர்.பட்டுப்புழு வளர்க்கும் முறை, பராமரிக்கும் முறை, பட்டுப்புழுவின் பரிணாம வளர்ச்சி, அதன் வணிக முறைகளையும் விளக்கமாகக் கேட்டறிந்த மாணவிகள், மல்பரி செடிகளை வளர்க்கும் முறைகளையும், மல்பரி செடிகளுக்கான நீர்ப்பாசன முறை, உரமிடும் வகைகள், பட்டுப் புழுவின் உணவு முறைகளையும் நேரில் பார்வையிட்டு, செயல்விளக்கம் பெற்றனர்.மேலும், இப்பகுதியில் பல்வேறு விவசாய பயிர்கள் சாகுபடி குறித்தும், காலநிலை மாற்றங்கள் குறித்தும் ஆய்வு செய்த மாணவிகளுக்கு, விவசாயி ரத்தினம் மற்றும் சிலர் வழிகாட்டினர்.

### விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்ட அனைத்து விவசாயிகள் நலச்சங்க செயற்குழுக் கூட்டம் செங்கத்தில் புதன்கிழமை நடைபெற்றது.கூட்டத்துக்கு திருவண்ணாமலை மாவட்டத் தலைவர் ஆர்.காசாம்பு தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஆர்.சி.கண்ணன் முன்னிலை வகித்தார். பொருளாளர் கே.பாஸ்கர் வரவேற்றார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் விவசாயக் கடனை தடையின்றி விவசாயிகளை அலைக்கழிக்காமல் வங்கி அதிகாரிகள் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் விவசாயிகளுக்கு உதவித் தொகைகளை தடையின்றி வழங்கவேண்டும், திருவண்ணாமலை மாவட்டம் வறட்சி மாவட்டம் என்பதால் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய மாநில அரசை இந்த கூட்டத்தின் மூலம் கோரிக்கை வைக்கப்படுகிறது என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## தரமான விதை உற்பத்தி செய்யப் பயிற்சி

தருமபுரியில் தரமானச் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.தருமபுரி வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமிற்கு வேளாண்மைத் துணை இயக்குநர் கி.வேங்கடேசன் (மாநிலத் திட்டம்)தலைமை வகித்தார். இந்த முகாமில், மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் எம்.ஆர்.அசோகன் பங்கேற்று, விதைப் பண்ணை அமைத்தல், விதை வயல் தரம் பேணுதல், கலப்பின்றித் தரமான விதை உற்பத்தி செய்தல் ஆகியவை குறித்து செயல் விளக்கம் அளித்தார்.முகாமில், வேளாண் அலுவலர் எஸ்.மோகன், விதைச் சான்று அலுவலர் கே.முத்துப்பெருமாள், துணை வேளாண்மை அலுவலர் பி.சேகரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கொள்முதல் விலையை உயர்த்தாவிட்டால் போராட்டம்

பால் கொள்முதல் விலையை உடனடியாக உயர்த்தாவிட்டால் ஆகஸ்ட் மாதம் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது.அந்தச் சங்கத்தின் நாமக்கல் மாவட்டப் பேரவைக் கூட்டம் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.ஆர்.முத்துச்சாமி தலைமையில் நாமக்கலில் வியாழக்கிழமை நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் பி.பெருமாள் சிறப்புரையாற்றினார்.தமிழக சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது, பால் கொள்முதல் விலை உயர்த்தப்படும் என எதிர்பார்த்திருந்த கால்நடை வளர்ப்போருக்கு அது குறித்த அறிவிப்பு இல்லாதது மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. தொடர்ந்து, இந்தக் கூட்டத் தொடரிலேயே பாலுக்கான கொள்முதல் விலையை அரசு உயர்த்த வேண்டும். இல்லையெனில், ஆகஸ்ட் மாதம் தமிழக அளவில் பெரும் போராட்டம் நடத்தப்படும். ஆவின் கலப்புத் தீவனம் 50 சதம் மானிய விலையில் வழங்க வேண்டும், கர்நாடக அரசைப்போல தமிழக அரசும் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.3 வீதம் ஊக்கத் தொகையும், தொடக்கக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் வீதம் மானியமும் வழங்க வேண்டும். பாலின் தரத்தை அளவீடு செய்ய 1992-ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்ட ஆலிவ்ஸ் முறையை அமலாக்க வேண்டும். தற்போதுள்ள எம்ஆர்எஃப் முறையைக் கைவிடவும் வேண்டும். மாவட்ட ஒன்றியம், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் பாலைக் கொள்முதல் செய்யும்போது பாலின் அளவையும், தரத்தையும் அங்கேயே அளவீடு செய்ய வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகள் வாங்க, கொட்டகை அமைக்க எளிய

நிபந்தனைகளுடன் கடன் வசதி செய்து தர வேண்டும். தொடக்கக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களைப் பணிநிரந்தரம் செய்து சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.ஆதிநாராயணன், பால் உற்பத்தியாளர் சங்க மாவட்டச் செயலர் சி.ரங்கசாமி, உதவிச் செயலர்கள் ஆர்.வேலாயுதம், கே.செல்வம், மு.சி.செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாமக்கல்லில் ரூ.32 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 1,650 பருத்தி மூட்டைகள் மொத்தம் ரூ.22 லட்சத்துக்கு ஏலம் போனது. நாமக்கல் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரம்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், சேலம், திருச்சி, கரூர் மாவட்டங்களில் இருந்து பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த சில வாரங்களாக இந்த மாவட்டங்களில் பருத்தி அறுவடை தீவிரமாக நடைபெற்று வருவதை அடுத்து, வரத்து அதிகரித்து வருகிறது. இதன்படி, வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1,650 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவந்தனர். இதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,869 முதல் ரூ.5,115 வரையும், சுரபி ரூ.5,809 முதல் ரூ.7,326 வரை என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.32 லட்சத்துக்கு விற்பனையானதாக கூட்டுறவு விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர். கடந்த வாரம் (ஜூலை 24) நடைபெற்ற ஏலத்தில் 2,000 பருத்தி மூட்டைகள் வரப்பெற்றதில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,800 முதல் ரூ.5,299 வரையும், சுரபி ரூ.6,900 முதல் ரூ.7,599 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.42 லட்சத்துக்கு விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

## சம்பா பாசனத்துக்காக ஆக. 15-க்குப் பிறகு மேட்டூர் அணையை திறக்க வேண்டும்

சம்பா பாசனத்துக்காக ஆக. 15-லிருந்து 20-ம் தேதிக்குள் மேட்டூர் அணையை திறக்க வேண்டுமென திருவாரூரில் நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

கங்களாச்சேரி சா.வீ. ராமகிருஷ்ணன்: சம்பா பயிர்கள் மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கிக் கொள்ளாத வகையில், மேட்டூர் அணையை ஆக. 15 முதல் 20-ம் தேதிக்குள் திறக்க வேண்டும். திருப்பள்ளிமுக்கூடலில் நீர்மூழ்கித் தடுப்பணை அமைத்து அப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும். எஸ். தம்புசாமி

(தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம்): திருமண்டக்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு நிலுவை வைத்துள்ள தொகையை 15% வட்டியுடன் மாவட்ட நிர்வாகம் பெற்றுத் தர வேண்டும். பி.எஸ். மாசிலாமணி (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): கொரடாச்சேரி, திருத்துறைப்பூண்டி பகுதி விவசாயிகளுக்கு கடந்த ஆண்டுக்கான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். சம்பா 1.40 லட்சம் ஹெக்டேர் சாகுபடியாகவுள்ள நிலையில் தேவையான விதையை வேளாண்துறை இருப்பு வைக்க வேண்டும். நெடுவை ராஜதுரை: மத்திய அரசு நெல் குவிண்டாலுக்கு ரூ. 2,500, மாநில அரசு ஊக்கத் தொகை ரூ. 500 வழங்க வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசிய வங்கிகள் மூலம் நிபந்தனையின்றி குறைந்த வட்டியில் பயிர்க்கடன், ஆழ்குழாய் கிணறு அமைக்கக் கடன் வழங்க வேண்டும். பேரளம் பாலகுமாரன்: பேரளம் துணை மின் நிலையத்துக்கு மின்ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக மின்பழுதுகளை சரிசெய்வதில் பிரச்னை ஏற்படுகிறது. இதனை சரிசெய்ய வேண்டும். நன்னிலம் மணிமாறன் (முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்): நன்னிலம் பகுதி பாசன வாய்க்கால்களில் பல இடங்களில் பழுதான ஷட்டர்களை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சில ஷட்டர்களை பொதுப்பணித் துறையினர் இது எங்களது கணக்கில் இல்லை. அதனால் சரி செய்ய முடியாது என்கின்றனர். இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முன்னதாக கூட்டம் தொடங்கியவுடன், விவசாயி பாண்டியன் பேசுகையில், காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர்ப்பங்கீட்டு குழு உடனடியாக அமைக்க வேண்டும். மத்திய அரசின் பழைய பயிர்க் காப்பீடுத் திட்டத்தையே தொடர வேண்டும். மரபணு மாற்று விதை ஆய்வை தடுக்க வேண்டும் என்று கூறி கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் வெளிநடப்பு செய்கிறோம் எனக் கூறியதைத் தொடர்ந்து விவசாயிகள் கூட்ட அறையிலிருந்து வெளியில் வந்தனர். ஆனால், குறிப்பிட்ட சில விவசாயிகள் மட்டுமே ஆட்சியர் அலுவலகம் எதிரில் தஞ்சாவூர் - திருவாரூர் சாலையில் அமர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி மறியலில் ஈடுபடத் தொடங்கினர். சுமார் 15 நிமிடத்துக்குப் பின் மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது. வெளிநடப்பு செய்த விவசாயிகளில் பலர் மீண்டும் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் ஆ. அழகிரிசாமி, வெண்ணாறு கோட்டப் பொறியாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சிறந்த உழவர் மன்றத்துக்கு பரிசளிப்பு

தூத்துக்குடி மாவட்ட சிறந்த உழவர் மன்றத்துக்கு பரிசளிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் நபார்டு வங்கி மூலமாக உருவாக்கப்பட்ட பல உழவர் மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில், 2006ஆம் ஆண்டு ஆதனூர் கிராமத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, எப்போதும் வென்றான் கிளை ஆதரவுடன் உருவாக்கப்பட்ட வீரபாண்டிய கட்ட பொம்மன் உழவர் மன்றம் நிகழாண்டில் சிறந்த உழவர் மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. 500-க்கும் மேற்பட்ட மக்காச்சோள உற்பத்தியாளர்களைக் கொண்ட தொழில் சார்ந்த கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கியது, விவசாயத் துறையோடு இணைந்து மண் பரிசோதனை முகாம்களை நடத்தியது, பால் உற்பத்தியை பெருக்கும் வகையில் 200 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை உருவாக்கியது உள்ளிட்ட பணிகளை செய்தமைக்காக இந்த மன்றத்துக்கு விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தின்போது, ஆட்சியர் ம. ரவிக்குமார் வீரபாண்டிய கட்டபொம்மன் உழவர் மன்றத் தலைவர் செல்வ கட்டபொம்ம துரை, செயலர் சண்முக மல்லுச்சாமி ஆகியோருக்கு நினைவுப் பரிசும், ஆயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கிப் பாராட்டினார். நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் பெல்லா, நபார்டு வங்கி அதிகாரி நடராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டும்

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று மாநிலங்களவை திமுக உறுப்பினர் கனிமொழி வலியுறுத்தினார். மாநிலங்களவையில் இது தொடர்பாக அவர் வியாழக்கிழமை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது: "தமிழகம் 2011-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வழக்கமான அளவைவிட குறைவான மழைப் பொழிவைப் பெற்று வறட்சியின் பிடியில் உள்ளது. 2013-இல் வடகிழக்கு, தென்மேற்கு பருவ மழைகளும் போதுமான அளவு பெய்யத் தவறிவிட்டன. இந்த நிலையில், எல்நினோ பாதிப்பு இந்திய துணைக் கண்டத்தில் இந்த ஆண்டு கடுமையாக இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பருவமழையும் தாமதமாக வந்துள்ளது. இதனால், மாநிலத்தில் நெருக்கடியான சூழல் உருவாகி வருகிறது. கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் மாநிலம் முழுவதும் இருப்பது குறுகியகாலப் பயிர் சாகுபடியைக் குறைத்துவிட்டது. எனவே, தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். மேலும், தேவைப்படும் நிவாரண உதவிகளும் உரிய சமயத்தில் விவசாயிகளுக்குக்

கிடைக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். ஆப்கனில் கடத்தப்பட்ட பாதிரியாரை மீட்க வலியுறுத்தல்: ஆப்கானிஸ்தானில் கடத்தப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த பாதிரியாரை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவகங்கை மக்களவைத் தொகுதி உறுப்பினர் பி.ஆர். செந்தில்நாதன் வலியுறுத்தினார். மக்களவையில் இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் கேள்வி நேரம் முடிந்ததும் முன்வைத்த கோரிக்கை: தமிழகத்தைச் சேர்ந்த பாதிரியார் அலெக்ஸ் பிரேம்குமார் ஆப்கானிஸ்தானில் கடந்த ஜூன் 2-ஆம் தேதி கடத்தப்பட்டார். சிவகங்கை தொகுதியைச் சேர்ந்த அவர்,அங்கு சமூகப் பணி ஆற்றச் சென்றிருந்தார். கடத்தப்பட்டு 6 வாரங்கள் ஆகியுள்ள நிலையில், அவர் பத்திரமாக தாயகம் திரும்புவதை எதிர்நோக்கி தொகுதி மக்களும், அவரது குடும்பத்தினரும் கவலையுடன் கவலையுடன் உள்ளனர். எனவே, அவரை மீட்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் நீர்மட்டம் 82 அடியாக உயர்வு**

**சேலம் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82.430 கனஅடியாக அதிகரித்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது. இருப்பினும் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் இருந்து உபரிநீர் திறந்து விடப்படுவதால் அணையின் நீர்மட்டம் ஒரு அடி அதிகரித்து 82.430 கனஅடியாக இருக்கிறது. அணைக்கு விநாடிக்கு 14,392 கனஅடி நீர் வரத்து உள்ளது. அணையின் நீர் இருப்பு 44.422 டி.எம்.சி.,யாகவும், அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு 6700 கனஅடியாகவும் உள்ளது. கபினி. மற்றும் கே.ஆர்.எஸ். அணைகளில் இருந்து விநாடிக்கு 23,000 கனஅடிநீர் திறக்கப்பட்டு வருவதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**




**<u>நிரம்புகிறது சோலையார் அணை; மேல்நீராறில் 11 செ.மீ., மழை</u>**

வால்பாறை : வால்பாறையில் பெய்து வரும் பருவ மழையினால், சோலையாறு அணை நிரம்பும் தருவாயில் உள்ளது. கோவை மாவட்டம் வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழை பெய்து வருவதால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதோடு, அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது.மேல்நீராறு அணையிலிருந்து வினாடிக்கு 1,390 கன அடி தண்ணீரும், கீழ்நீராறு அணையிலிருந்து வினாடிக்கு 186 கன அடி தண்ணீரும், டனல் வழியாக சோலையாறு அணைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. தொடரும் மழையினால், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம், நேற்று காலை

8.00 மணி நிலவரப்படி 155.36 அடியாகவும், மதியம் 1.00 மணி நிலவரப்படி 156 அடியாகவும் உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 2,730 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1,039 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.சோலையாறுஅணை இன்று (1ம்தேதி) அதிகாலை நிரம்ப வாய்ப்புள்ளது என்பதால், அணையை கண்காணிக்கும் பணியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீ.,): வால்பாறை_40, சோலையாறு _65, மேல்நீராறு _110, கீழ்நீராறு_62. அதிகபட்சமாக மேல்நீராறு அணைப்பகுதியில் 11 செ.மீ.,மழை பெய்துள்ளது.பரம்பிக்குளம் 30 அடியாக உயர்வுஇதே போல், 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 30.68 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 1,162 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. வினாடிக்கு 23 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பரம்பிக்குளத்தில் 15 மி.மீ.,மழை பெய்துள்ளது. சோலையாறுஅணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், மானாம்பள்ளி பவர்ஹவுஸ் வழியாக வினாடிக்கு 634 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பி.ஏ.பி., அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர்... : குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் முறையீடு</u>

திருப்பூர்: "தாராபுரம் தாலுகாவில்< உள்ள 7,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதால், அமராவதி பழைய ஆயக்கட்டில் இருந்து, தாராபுரம் வாய்க்கால்களுக்கும் தண்ணீர் திறக்க வேண்டும்,' என, விவசாயிகள் முறையிட்டனர். மாதாந்திர விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., பாரிவேல், இணை பதிவாளர் பாபு, வேளாண் துறை இணை இயக்குனர் சந்தானகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். கடந்த கூட்டத்தில், விவசாயிகளிடம் பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து விளக்கப்பட்டது. தொடர்ந்து, தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர். கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி: கடந்த இரண்டு ஆண்டுகளாக, அரசு

உத்தரவுப்படி, நீர் நிர்வாகம் மேற்கொள்ளப்படுவதில்லை. பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திருட்டு அதிகமாக நடக்கிறது. முக்கிய கோரிக்கைகளை முன்வைக்க ஏதுவாக, சென்னையிலும், விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடத்த வேண்டும். வறட்சி அதிகமாக இருப்பதால், திருப்பூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, நிவாரணம் பெற்றுத்தர வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகி மனோகரன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வங்கிகள் சரியாக உதவி செய்யவில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், அதிக வட்டி விதிக்கின்றன. அரசு அறிவித்தபடி, நிவாரண உதவி வழங்க வேண்டும்.உழவர் உழைப்பாளர் கட்சி நிர்வாகி ஈஸ்வரமூர்த்தி: கடந்த 23ம் தேதி முதல் 29ம் தேதி வரை, அமராவதியில் உயிர் நீர் திறக்கப்பட்டு, பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்களில் தண்ணீர் செல்கிறது; கடைமடையை அடைந்து விட்டது. வரும் ஆக., மாதம், பழைய ஆயக்கட்டு பயிர் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படும். உடுமலை தாலுகாவில் உள்ள ஆறு வாய்க்கால்களில், தண்ணீர் விடுவதுபோல், தாராபுரத்தில் உள்ள நான்கு வாய்க்கால்களிலும், தண்ணீர் திறக்க வேண்டும். இதன் மூலம், 7,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். பி.ஏ.பி., பாசன சபை முன்னாள் தலைவர் பொன்னுசாமி: ஆண்டிபாளையம் வேளாண் கூட்டுறவு சங்கத்தை, நகர வங்கியாக மாற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதனால், இடுவாய் கிராம மக்கள் பாதிக்கப்படுவர் என்பதால், ஆண்டிபாளையம் சங்கத்தை, நகர வங்கியாக மாற்றக்கூடாது.சேவூர் விவசாயி சுப்ரமணி: சேவூர் குளத்தில் மூன்றடி ஆழத்துக்கு மண் அள்ள அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், ஆறு முதல் எட்டு அடி ஆழத்துக்கு மண் அள்ளப்பட்டுள்ளது. மீண்டும் மண் அள்ள அனுமதிக்கக் கூடாது.ஜல்லிப்படி விவசாயி மலரவன்: உப்பாறு அணையில் இருந்து, வண்டல் மண் அள்ள அருகில் உள்ள விவசாயிகளுக்கு அனுமதி அளிக்க வேண்டும்.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மதுசூதனன்: மரபணு மாற்று விதைகளை பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது. தமிழக அரசு, ஒரு குவிண்டால் நெல்லுக்கு 60 முதல் 70 ரூபாய் வரை ஊக்கத்தொகை வழங்குகிறது. ஊக்கத்தொகை வழங்கக்கூடாது என மத்திய அரசு தடுத்துள்ளது. வழக்கம்போல் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும். தீவன பற்றாக்குறை ஏற்படுவதால், மாட்டுப்பாலுக்கு 30 ரூபாய், எருமை பாலுக்கு 40 ரூபாய் விலை நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர். அதிகாரிகளுக்கு கலெக்டர் அறிவுரை கலெக்டர் பேசுகையில், ""விவ சாயிகளின் கோரிக்கை மனுக்களை, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், நன்கு படித்து, சரியாக புரிந்துகொண்டு, முறையாக பதில் அனுப்ப

வேண்டும். கோரிக்கையின் சாராம்சத்தை உணராமல், பொத்தாம் பொதுவாக பதில் அனுப்பக்கூடாது. சாதாரண மனுவாக இருந்தாலும், ஆராய்ந்து பார்த்து பதிலளிக்க வேண்டும்," என்றார்.

**<u>மக்காச்சோளம் விலை உயர்வு</u>**

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டத்தில் நொய்யல், வேட்டமங்கலம், குந்தானிபாளையம், மரவாபாளையம், கவுண்டன்புதூர், ஓலப்பாளையம், திடுக்காடுதுறை, ஓரம்புப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மக்காச்சோளம் தனியாகவும், மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களில் ஊடுபயிராகவும் பயிரிடப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் மக்காச்சோளம், வியாபாரி களிடமும் மற்றும் வாரச்சந்தைகள் மூலமும் விற்பனை செய்யப்படுகிறது. கோழித்தீவனம், மாட்டுத்தீவனம் மற்றும் மாவு தயாரிக்க அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. தமிழகம் மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், இங்கிருந்து அனுப்பப்படுகிறது. கடந்த வாரத்தில், மக்காச்சோளம், 100 கிலோ கொண்ட மூட்டை, 1,400 ரூபாய்க்கு விற்பனையானது. நடப்பு வாரம், 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை, 1,500 ரூபாய்க்கு விற்பனையானது. விளைச்சல் இல்லாத காரணத்தால், வரத்து குறைவு காரணமாக மக்காச்சோளம் விலை மூட்டைக்கு, 100 ரூபாய் உயர்வு அடைந்துள்ளது. மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>விவசாயக் கல்லூரி; எம்.எல்.ஏ.,கோரிக்கை</u>**

காரைக்குடி : அழகப்பா பல்கலையில், விவசாய கல்லூரி அமைக்க வேண்டும்,என காரைக்குடி எம்.எல்.ஏ., சட்டசபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.காரைக்குடி எம்.எல்.ஏ., சோழன் சித.பழனிச்சாமி, சட்டமன்ற கூட்டத்தொடரில்,முதல்வர் ஜெயலலிதாவிடம் கோரிக்கை அடங்கிய மனுவை அளித்தார். அதன் விபரம்: கண்ணங்குடி, புதுவயலில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும், அழகப்பா பல்கலை கழகத்தில் விவசாய கல்லூரி அமைத்து தர வேண்டும், எழுவன்கோட்டை முதல் ஈகரை வரை விருச்சுழி ஆற்றில் பாலம் கட்ட வேண்டும், சங்கரபதி கோட்டையை புதுப்பித்து சுற்றுலாத்துறையில் சேர்க்க வேண்டும், தேவகோட்டை யில் பெண்கள் கல்லூரி, காரைக்குடி மருத்துவமனையை தலைமை மருத்துவ மனையாக அறிவிக்க வேண்டும். தொழிற்பேட்டைக்கு தேவையான இடம்

காரைக்குடியில் இருப்பதை தேர்வு செய்ய வேண்டும், சாக்கோட்டை, கண்ணங்குடியில் ஒன்றிய அலுவலகம் கட்ட வேண்டும், காரைக்குடி தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள் அமைக்க வேண்டும்,வீட்டு வசதி வாரிய குடியிருப்பு சேதம் அடைந்துள்ளதால்,புதிய அடுக்குமாடி வீடுகள் கட்டி தரவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## வேளாண்மை கல்லூரி மாணவர்கள் ஆய்வு

பழநி : மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் பழநிபகுதியில் தங்கி, நேரடியாக விவசாயபணிகளை கண்டறிந்து ஆய்வுமேற்கொள்கின்றனர். மதுரை வேளாண் ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்பக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 16 மாணவர்கள், 8 பேர் கொண்ட தனிகுழுவாக பிரிந்து, திண்டுக்கல் மாவட்டம், பழநி, ரெட்டியார்சத்திரம்பகுதிகளில் தங்கி, விவசாயிகளிடம் நேரடியாக பழகி, நவீன சாகுபடிமுறை, உரமிடும்முறைகள் மற்றும் விவசாயிகளின் நேரடி பணிகள் பற்றி ஆய்வு மேற்கொள்கின்றனர்.ஆயக்குடியில் கொய்யா விளைச்சல் குறித்தும், அ.கலையம்புத்தூர், காரமடை, டி.கே.என்.,புதூர் போன்ற பகுதிகளில் நெல்நடவு, விளைச்சல் குறித்தும் விவசாயிகளிடம் கேட்டறிந்து, ஆய்வுகளை மேற்கொண்டு, விதைநேர்த்தி, மண்மாதிரி, தென்னைமர டானிக் போன்றவை குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடத்துகின்றனர். மாணவர்கள் கூறுகையில், பழநி வேளாண்உதவி இயக்குனர் வழிகாட்டுதலின்படி, பாலசமுத்திரத்தில் தங்கியுள்ளோம். மூன்று மாதகாலத்தில் கிராமங்களில் கண்ட வளர்ச்சி, விவசாயப்பணிகள் குறித்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்கிறோம், என்றனர்.

## சொட்டுநீர் மூலம் கரும்பு சாகுபடி; விவசாயிகளுக்கு இலவச உரம்

பழநி : பழநி சுற்றுவட்டாரத்தில் சொட்டுநீர்பாசனம் மூலம் கரும்பு சாகுபடிசெய்துள்ள விவசாயிகளுக்கு ரூ.25ஆயிரம் மதிப்புள்ள உரம் இலவசமாக வழங்கப்படுகிறது. பழநியில் 157 எக்டர், பாப்பம்பட்டியில் 69 எக்டர், நெய்க்காரப்பட்டியில் 940 எக்டர், ஆயக்குடியில் 136 எக்டர் பரப்பளவில் ஆண்டுதோறும் கரும்புசாகுபடி செய்யப்படுகிறது. தற்போது போதிய

மழையில்லாமல், தண்ணீர் இன்றி, சொட்டுநீர் பாசனமுறையில் ஒருசில விவசாயிகள் கரும்புசாகுபடி செய்துள்ளனர். அவர்களை ஊக்கப்படுத்தும்விதத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மூலம் நீடித்த நிலைத்த கரும்புசாகுபடிக்காக, ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள நீரில் கரையும் உரங்களை வேளாண்துறையினர் இலவசமாக வழங்குகின்றனர். இத்திட்டத்தில் பயன்பெறவிரும்பும் விவசாயிகள், தங்கள் நிலத்தின் சிட்டா அடங்கல், ரேஷன்கார்டு, போட்டோ, சொட்டுநீர் ஆதாரஆவணம் ஆகியவற்றுடன், தங்கள்பகுதி வேளாண் உதவி அலுவலர்கள், அல்லது வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என பழநி உதவி இயக்குனர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

## திருந்திய நெல் சாகுபடி; மாணவிகள் விளக்கம்

தேனி : உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டியில் குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி இறுதியாண்டு மாணவிகள் ஆட்லின், அனாராஜ், காவியா, தனலெட்சுமி, பிரியங்கா, மணிமாலா, வினிதா, கிரீஷ்மாமது, அறிவுமதி, ஆகியோர் கிராமத் தங்கல் திட்டத்தில் திருந்திய நெல் சாகுபடிமுறை செயல் விளக்கத்தை விவசாயிகளுக்கு அளித்தனர். இதில் 30 விவசாயிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர். கல்லூரியின் உதவி பேராசிரியர்கள் குஞ்சம்மாள், சமரசம் பங்கேற்றனர். மாணவிகள் வயலில் இறங்கி திருந்திய நெல் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்து செயல் முறை விளக்கம் அளித்தனர். மலைமாடுகள் சங்க தலைவர் ஜூடு தத்ததேயஸ், படையல் தென்னை விவசாயிகள் சங்க தலைவர் சூசைமணி, உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## காபி விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்

போடி : போடி அருகே குரங்கணி காபி வாரியத்தில், காபி விவசாயிகளுக்கான செயல் முறை விளக்கம் மதுரை விவசாயக் கல்லூரி மாணவிகள் சார்பில் நடந்தது. காபி வாரிய அலுவலர்கள் கார்த்திகேயன், பவித்தரன் முன்னிலை வகித்தனர். இலைத்துரு நோய் காபி மகசூலை பாதிக்க கூடியதாகும்.இதன் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் போர்டோ கரைசல் பயன்படுத்தும் முறை,

முக்கியத்துவம் குறித்தும், காபி தண்டு துளைப்பான் மற்றும் காபி துளைப்பான்களை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் மாணவிகள் ஹேமாவதி, இட்டிஸ்ரீ, கலைவாணி, கார்த்திகா, மீனா, கார்த்திகேயனி, கலாமணி, மீனாப்பிரியா ஆகியோர் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

**<u>தக்காளி சாகுபடி பரப்பு அதிகரிப்பு; விலை குறைய வாய்ப்பு அதிகம்</u>**

தேனி : தேனி மாவட்டத்தில் தக்காளி சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளதால் விலை குறையும் வாய்ப்புகளும் அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாகவே வெளிமார்க்கெட்டில் தக்காளி விலை கிலோ 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகிறது. நேற்று தேனி உழவர்சந்தையில் கிலோ 30 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. வெளி மார்க்கெட்டில் 40 ரூபாய்க்கு விற்றது. எனவே விவசாயிகள் தக்காளி சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, அரப்படித்தேவன்பட்டி, தேவாரம், உத்தமபாளையம், போடி உட்பட பல பகுதிகளில் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதனிடையே மழை குறைந்து வெயில் அதிகரித்துள்ளதால், தற்போது பலன் கொடுக்கும் நிலையில் உள்ள தக்காளி செடிகளில் காய்ப்பு அதிகரித்துள்ளது. எனவே தேனி சந்தைக்கு வரத்து அதிகரித்து வருகிறது. எனவே தக்காளி விலை குறையும் வாய்ப்பு உள்ளதாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தேயிலை தூள் விற்பனை அமோகம் : கிலோவிற்கு ரூ.6 அதிகரிப்பு</u>**




குன்னூர்: குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 31வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 7 லட்சத்து 59 ஆயிரத்து 371 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 2 ல ட்சத்து 84 ஆயிரத்து 443 கிலோவும், டஸ்ட் ரகம் 4 லட்சத்து 74 ஆயிரத்து 828 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தேயிலைத் தூளை கொள்முதல் செய்தனர். இதன் காரணமாக 75 சதவீதம் தேயிலைத் தூள் விற்பனையானது. இந்தவார நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோவிற்கு யி50 முதல் ரூ.55, உயர்வகை யி64 முதல் ரூ.68, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.55 முதல் ரூ.60, உயர்வகை ரூ.65 முதல் ரூ.70 விலை கிடைத்தது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.4 முதல் ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளது. தேயிலை வரத்து அதிகரித்து, அதன் விலை சற்று உயரத்

துவங்கி உள்ளதால் கூட்டுறவு ஆலைகளில் உறுப்பினராக உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கருங்காலக்குடியில் வயலக கூட்டமைப்பு கூட்டம்**

மேலூர், : விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கொட்டாம்பட்டி வட்டார வயலக கூட்டமைப்பின் ஆண்டு பொதுக் குழு கூட்டம் கருங்காலக்குடியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கொட்டாம்பட்டி வட்டார வய லக கூட்டமைப்பு தலைவர் காந்தி தலைமை வகித்தார். சேக் மைதீன் ஆண்டறிக்கை வாசித்தார். விவசாயிகளுக்கு அவர்கள் சார்ந்த ஆயக்கட்டு கண்மாய்களை ஆழப்படுத்துதல், மடை மற்றும் மறுகால்கள் கட்டு தல், மீன் பண்ணை அமை க்க பள்ளம் அமைப் பது, பெண்கள் வயலக குழுக்கள் வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெறுவது போன்ற திட்டங்கள் குறி த்து விளக்கி கூறப்பட்டது. இந்த ஆண்டிற்கான வரவு செலவு குறித்து விவசாயிகள் முன்னிலையில் வாசித்து ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் நேஷனல் வங்கி உழவர் பயிற்சி மைய இயக்குநர் குறிஞ்சிநாதன், தானம் அறக்கட்டளை வய லக கண்மாய் முதன்மை நிர் வாகி குருநாதன், வேளாண் அறிவியல் மைய பேராசிரியர் ரங்கராஜ், நபார்டு வங்கி உதவி மேலாளர் சங்கரநாராயணன் கலந்து கொண்டனர். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**சூலூர் ஒன்றிய அலுவலக கூரை தோட்டத்தில் இயற்கை வேளாண்மை காய்கறி விளைச்சல்**

சூலூர், : சூலூர் ஒன்றிய அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கூரை தோட்டத்தில் இயற்கை வேளாண்மை மூலம் விளையும் காய்கறி விளைச்சல் களைகட்டுகிறது. சந்தைகளில் விற்பதை விட 10 சதவீதம் விலை அதிகமாக இருந்தாலும், ரசாயன கலப்பில்லாத இந்த காய்கறிகளை மக்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். கோவை மாவட்டத்தில் அரசு அலுவலகங்களில் முதன்முறாக சூலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தின் மேல் கூரைத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. திட மற்றும் திரவ வள மேலாண்மை மையங்களில் உற்பத்தியாகும் உயிர் உரங்களை பயன்படுத்தி இயற்கை வேளாண்மை முறையில் இந்த தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 8000 சதுர அடியில் 1200 மூங்கில் கூடைகளில் கீரை வகைகள், தக்காளி, கத்தரி, முள்ளங்கி, வெங்காயம், பீட்ரூட், பாகற்காய்,

பீர்க்கங்காய் போன்ற காய்கறி வகைகள், சோற்றுக்கற்றாழை, தூதுவளை போன்ற மருத்துவ உணவு பொருட்கள் பயிரிடப்படுகின்றன. இந்த கூரைத் தோட்டத்தை பராமரிக்க மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த 10 பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இங்கு விளையும் காய்கறிகளை விற்று கிடைக்கும் வருமானத்தை அவர்கள் தங்களது சம்பளமாக பிரித்துக் கொள்கிறார்கள். சராசரியாக தலா ஒருவருக்கு தினமும் ரூ.150 வருமானமாக கிடைக்கிறது. மேலும், இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகளை விற்பனை செய்ய ஊராட்சி அலுவலக வளாகத்தில் ரூ.5 லட்சம் மதிப்பில் 400 சதுர அடி பரப்பளவில் அங்காடி கட்டடம் அமைப்பதற்கான கட்டுமான பணியும் நடந்து வருகிறது.
இது குறித்து சூலூர்பி.டி.ஓ தேவகி கூறியதாவது: கூரைத்தோட்டம் அமைக்க சத்தியமங்கலத்தில் இருந்து ஆர்டர்கள் மூலமாக மூங்கில் கூடைகள் வாங்கப்பட்டன. அந்த கூடைகளை சாணத்தால் நன்றாக மெழுகி, கூடைகளில் இருக்கும் துவாரங்களை முதலில் அடைக்கப்படுகின்றன. பின்பு, பயிரிடப்படும் காய்கறிக்கு ஏற்ற மண் அதில் நிரப்பப்படுகிறது. தென்னை மஞ்சி, இயற்கை உரங்கள் அந்த மண்ணில் கலந்து பின்பு காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. இதற்கு தேவையான தண்ணீர் அலுவலக கட்டடத்தின் மேல் கூரையில் டேங்க் மூலமாக சேமிக்கப்படுகிறது. உரங்கள் எங்கள் அலுவலக வளாகத்தில் சேரும் மட்கும் குப்பைகளை கொண்டு தயாரிக்கிறோம். இயற்கை வேளாண்மை முறையில் விளைவிக்கப்படுதால், இங்கு விளையும் காய்கறிகளுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது. சந்தை, காய்கறி கடைகளில் விற்கப்படுவதை விட 10 சதவீதம் கூடுதல் விலைக்கு விற்கப்பட்டாலும், ரசாயன கலப்பில்லாத இந்த காய்கறிகள், கீரைகளை அவர்கள் விரும்பி வாங்கி செல்கின்றனர். தினமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கூரைத் தோட்டத்தை பார்வையிட்டு செல்கின்றனர். அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியிருப்போர், தோட்டம் அமைக்க இடமில்லாதவர்கள் தங்களது வீட்டு கூரையில் தோட்டம் அமைப்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

## பருத்தியை தாக்கும் இலை சுருட்டல் நோய் விவசாயிகள் கவலை

பரமக்குடி, : பரமக்குடியை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் பருத்தியை தாக்கும் இலைசுருட்டை நோயினால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். பரமக்குடி சுற்றியுள்ள கிராம பகுதிகளில் பருத்தி அதிக அளவில் பயிர் செய்யப்பட்டுள்ளது. வெள்ளைத்தங்கம் என அழைக்கப்படும் பருத்தி பயிரின் காயிலிருந்து பஞ்சு விளைகிறது. பருத்தி செடியை சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைகளை தின்னும் பூச்சிகள் தாக்குவதால் அதிக மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் தினைக்குளம், பாண்டிகண்மாய், மஞ்சூர், காவனூர், பாம்புவிழுந்தான், அண்டக்குடி உள்ளிட்ட பல்வேறு கிராம பகுதிகளில் தற்போது பருத்தி செடிகளை இலைசுருட்டல் நோய் தாக்கி வருகிறது. இந்நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் பருத்திசெடியின் இலைகள் பழுத்து சுருண்டு விடுகின்றன. இதனால் அச்செடிகளில் காய்கள் பிடிப்பது கிடையாது. செடியில் உள்ள பூக்களும் உதிர்ந்து விடுகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். இதுகுறித்து விவசாயி சந்திரன் கூறுகையில், பருத்தி செடியை கற்றாழம் பூச்சி கடிப்பதால் இலை சுருட்டை நோய் தாக்குகிறது. தற்போது நோய் எதிர்ப்பு சக்திக்காக பசூக், கிரிபோஸ் போன்ற மருந்துகளை கலந்து அடித்து வருகிறோம். இம்முறை இந்த நோய் தாக்குதலினால் பருத்தி விளைச்சல் குறைந்து வருகிறது என்று கூறினார்.

## ஏரி பாசன விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

கும்மிடிப்பூண்டி, : ஆரணியில் ஏரி நீர் பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மை குழு மற்றும் துணைக்குழுக்களுக்கு இரண்டு நாள் பயிற்சி முகாம் ஆரணியில் நடந்தது. கன்னிகைபேர், பாலேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் இந்த பயிற்சி முகாமில் கலந்து கொண்டு ஏரி நீரை எப்படி பயன்படுத்த வேண்டும்? எந்தெந்த அளவுகளில் நீரை பங்கிட்டுக் கொள்ளவேண்டும்? என்றும் தாங்கள் சார்ந்துள்ள ஏரியின் அளவு, அதன் உயரம், பாசன வசதி பெறும் நிலம் எத்தனை ஏக்கர்? என்பன போன்றவை விரிவாக கூட்டத்தில் விளக்கிக் கூறினர். இப்பயிற்சி முகாமில் நிர்வாக பொறியாளர் செந்தில்குமார் உத்தரவின் பேரில்,

உதவி செயற்பொறியாளர் அன்பரசன் தலைமையில், இளநிலை பொறியாளர் சிவசண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். கன்னிகைபேர் ஏரிப்பாசன தலைவராக துரைராஜ் என்பவரும், இயக்குநராக கே.டி. ராமச்சந்திரன், பாலேஸ்வரம் ஏரி சங்க தலைவராக பல்ராம நாயுடுவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## அமராவதி பிரதான கால்வாயில் இன்று தண்ணீர் திறப்பு

உடுமலை, : தென்னை மற்றும் நிலுவை பயிர்களை காக்க அமராவதி அணையில் இருந்து பிரதான கால்வாயில் இன்று தண்ணீர் திறக்கப்படுகிறது. 15 நாட்களுக்கு தண்ணீர் விடப்படும். உடுமலை அருகே அமராவதி அணையில் இருந்து திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்குகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் வரை பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆற்று வழியாகவும், செப்டம்பர் முதல் ஜனவரி வரை புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மழை போதிய அளவு பெய்யாததாலும், அடிக்கடி பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதாலும் பிரதான கால்வாய் பாசனம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.தற்போது அணையில் ஓரளவு தண்ணீர் இருப்பதால் தென்னைகளை காக்கவும், கால்நடைகளுக்கு குடிநீர் கிடைக்கவும் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த இரு வாரங்களுக்கு முன்பு பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கக் கோரி கடந்த 23ம் தேதி மடத்துக்குளம் நால்ரோட்டில் அனைத்துக் கட்சியினர் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் பிரதான கால்வாயில் இன்று தண்ணீர் திறக்கப்படுகிறது. வினாடிக்கு 440 கனஅடி வீதம் 15 நாட்களுக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. மொத்தம் 570.24மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப் படுகிறது. இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், நிலுவையில் உள்ள பயிர்கள் மற்றும் தென்னைகளை காக்க தண்ணீர் திறக்கப்படுகிறது. இதை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். சட்டத்துக்கு விரோதமாக மோட்டார் வைத்து தண்ணீர் எடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

தினத் தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஜெயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அரியலூர் கலெக்டர் நேரில் ஆய்வு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக உறுதி



ஜெயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் நேரில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது விவசாயி களின் கோரிக்கைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களுக்கு கலெக்டர் வாக்குறுதி அளித்தார். மறைமுக ஏலம் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஒருங்கிணைந்த திருச்சி மாவ ட்ட வேளாண்மை விற்பனை க்குழு சார்பில் நடத் தப்பட்டு வருகிறது. இந்த விற்பனைக் கூடத்தில் ஆண் டிற்கு ரூ.100 கோடிக்கு மேல் எள், நிலக் கடலைப் பருப்புகள் விவசா யிகளிடமிருந்து மறை முக ஏல முறையில் வியா பாரிகள் கொள்முதல் செய்து நாட்டின் பல்வேறு பகுதி களுக்கு அனுப்பி வைக்கின் றனர். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் எள், கடலை போன்ற விளை பொருட்களுக்கு விலை நிர்ண யம் செய்வதில் வியாபாரிகள் முறைகேடு

செய்வதாகவும் எடை அளவு களில் முறைகேடு செய்வ தாகவும் உடனடியாக பணம் பட்டுவாடா செய்வ தில்லை என்றும் அடிக்கடி விவசாயிகள் குறை கூறி சாலை மறியல் மற்றும் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

கலெக்டர்நேரில்ஆய்வு

இதனையடுத்து அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் நேரடியாக ஜெயங் கொண்டம் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் ஆய்வு செய்தபொழுது விவசாயிகள் எரவாங்குடி கர்ணாமூர்த்தி, நத்தவெளி ஜெகநாதன் ஆகியோர் கலெக்டரிடம்கூறியதாவது ஒரே தரத்தில் உள்ள எள், கடலை போன்ற விளை பொருட்களுக்கு குறைவாக கொண்டு வந்த விவசாயி களுக்கு அதிக விலையும் அதிக அளவில் கொண்டுவந்த விவசாயிகளுக்கு குறைந்த விலையும் விலை நிர்ணயம் செய்து சம்பந்தப்பட்ட வியா பாரிகள் முறையான அரசு அனுமதி இல்லாமல் முகவர் களை நியமனம் செய்து விவசா யிகளிடம் குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்ட விளை பொருட் களை அதிக விலைக்கு வெளியூர் வியாபா ரிகளுக்கு விற்பனை செய்வதை முறைப் படுத்தவேண்டும்.

3–ந்தேதிதீர்வு

எலக்ட்ரானிக் தராசுகள் மூலம் சரியான எடையில் கொள்முதல் செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத் தனர். உடனடியாக அதிகாரி களை அழைத்து வரும் 3–ந் தேதி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் மத்தியில் இதற்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதிஅளித்தார். இதுபற்றி வியாபாரிகள் தரப்பில் மணிமொழி மற்றும் மணிவண்ணன் ஆகியோர் கூறியதாவது:– விவசாயிகளிடம் அன்றைய மார்க்கெட் நிலவரப்படி தரத் திற்கு தகுந்தவாறு கொள் முதல் செய்து வியாபாரிகளுக்கு நாங்கள் விவசாய விளை பொருட்களை அனுப்பி வைத்து வருகிறோம். இதில் எந்தவிதமான முறைகேடுகளும் நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை.இவ்வாறு அவர்கள்கூறினார்கள். இந்த ஆய்வின்போது உடை யார் பாளையம் கோட்டாட்சி தலைவர் கருணாகரன் தாசில் தார் முகுந்தன் வேளாண்மை துறை தோட்டக்கலைதுறை இணை இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள்



அறந்தாங்கி ஒன்றியம், நெய்வத்தளி ஊராட்சி யில், புதிதாக சாலை அமைப்பதற்காக இடங் களை விட்டு கொடுத்த விவசாயிகளுக்கு பாராட்டு விழா, அந்த சாலையின் திறப்பு விழா, நெய்வத்தளி ஊராட்சியை சேர்ந்த 32 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடு வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நெய்வத்தளியில் நடைபெற்றது. விழா விற்கு அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சாந்தி தலைமை தாங்கினார். ஒன்றியக்குழுத் துணை தலைவர்பெரியசாமிமுன்னிலைவகித்தார். விழாவில் ஆலங்குடி தொகுதி எம்.எல்.ஏ கு.ப.கிருஷ்ணன் கலந்து கொண்டு, விவசாயிகள் விட்டு கொடுத்த இடத்தில் அமைக்கப்பட்ட சாலையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும், சாலை அமைக்க இடம் கொடுத்த விவசாயிகளை பாராட்டினார். மேலும் 32 பயனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகளை வழங்கி பேசினார். தாசில்தார் கதிரேசன் வாழ்த்துரை வழங்கினார். விழாவில் ஒன்றிய கவுன்சிலர் சாந்தி ரமேஷ், நெய்வத்தளி ஊராட்சி மன்ற துணை தலைவர் உதயஆனந்தி நாகராஜன், உறுப்பினர்கள் சித்ராதேவி, சுப்பிரமணியன், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன் சிலர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அ.தி.மு.க. நிர்வாகிகள், கால்நடை பராமரிப்பு துறையினர், பொதுமக்கள்

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக நெய்வத்தளி ஊராட்சி மன்ற தலைவரும், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய ஊராட்சி மன்ற தலைவர் கள் கூட்ட மைப்பு தலைவருமான நெவளிநாதன் வரவேற்றார். முடிவில் பெற் றோர் ஆசிரியர் சங்க தலைவர் பழனியப்பன் நன்றி கூறினார்.

## வெள்ளிமலை பகுதியில் சாரல் மழை: வனப்பகுதி ஓடைகளில் நீர்வரத்து அதிகரிப்பு



வெள்ளிமலை பகுதியில் பெய்து வரும் சாரல் மழையால் வனப் பகுதிகளில் உள்ளஓடை களில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. வனப்பகுதிகளில் வறட்சி தேனி மாவட்டம் கடமலை– மயிலை ஒன்றியம் வெள்ளி மலை வனப்பகுதியில் ஏராள மான ஓடைகள் அமைந் துள்ளன. இந்த வனப்பகுதியில் கடமான், புள்ளிமான், யானை, முயல் உள்ளிட்ட வன விலங்கு களும் வசித்து வருகின்றன. வனப்பகுதியில் அமைந்துள்ள ஓடைகள் அனைத்தும் வனவிலங்குகளின் குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. இந்த ஓடைகள் அனைத்தும் கடமலை–மயிலை ஒன்றிய பகுதியில் ஒன்று சேர்ந்து வைகை ஆறாக ஓடுகிறது. கடந்த சில மாதங்களாக வெள்ளிமலை வனப்பகுதியில் உள்ள பெரும்பாலான ஓடை களில் நீர் வரத்து முற்றிலுமாக நின்றதால் அந்த பகுதிகளில் வசித்து வந்த வனவிலங்குகள் நீருக்காக வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வந்தன. மூலவைகை ஆற்றிலும் மிக குறைவான அளவு நீர் மட்டுமே வந்துகொண்டிருந் தது. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மேகமலை வனப்பகுதியில் பெய்த சாரல் மழையால் கோம்பைத்தொழு அருகில் உள்ள மேகமலை அருவியில் நீர்வரத்து ஏற்பட்டது. நீர்வரத்து கடந்த சில நாட்கள் வரை வறண்ட நிலையில் காணப் பட்ட அரசரடி கிராமம் அரு கில் உள்ள உடங்கல் ஆற்றில் தற்போது நீர்வரத்து ஏற் பட்டுள்ளது.

அதிக அளவில் இல்லாவிட்டாலும் வன விலங்குகளின் குடிநீர் தேவைக்கு அதிகமாக நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இத னால் வெள்ளிமலை வனப் பகுதியில் வனவிலங்குகளுக்கு ஏற்பட இருந்த குடிநீர் தட்டுப் பாடு அபாயம் நீங்கியது. இருப்பினும் இந்த சாரல் மழை யால் வெள்ளிமலை பகுதியில் அமைந்துள்ள மூலவைகை ஆற்றில் பெரிய அளவில் நீர்வரத்து ஏற்படவில்லை. குறைவான அளவு நீர் மட்டுமே வந்துகொண்டி ருக்கிறது. சாரல் மழை இன்னும் சில நாட்கள் நீடித்தால் மூலவைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து கடமலை–மயிலை ஒன்றிய வைகை ஆற்றில் தண்ணீர் வரும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். தற்போது கடமலை–மயிலை ஒன்றியத்தில் பெரும்பாலான கிராமங்கள் குடிநீர் பற்றாக் குறை ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே வெள்ளிமலை வனப்பகுதியில் நல்ல மழை பெய்து வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## திண்டிவனம் காய்கறிகள் சேமிப்பு மையத்தில் ஆந்திர மந்திரி திடீர் ஆய்வு



திண்டிவனத்தில் காய்கறிகள் சேமிப்பு மையத்தை ஆந்திர மாநில மந்திரி திடீர் ஆய்வு மேற்கொண்டார். காய்கறிகள் சேமிப்பு மையம் விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு, தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில் பெருநகர காய்கறிகள் அபிவிருத்தி தொகுப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு பகுதிகளில் காய்கறிகள் சேமிப்பு மையத்தினை செயல் படுத்தி வருகின்றது. இந்த சேமிப்பு மையத்தில் உள்ள விவசாயிகளிடம் இருந்து நேரடியாக காய்கறிகளை தமிழக அரசு கூட்டுறவுத்துறை மூலம் சந்தை விலைக்கு வாங்கி வருகின்றது. அவ்வாறு வாங்கப்பட்ட காய்கறிகளை அம்மா பசுமை காய்கறி கடைகள் மூலம் நுகர்வோர் களுக்கு குறைந்த விலையில் விற்கப்பட்டு வருகின்றது.

ஆந்திர மந்திரி ஆய்வு அதன்படி திண்டிவனம் அருகே ஒலக்கூரில் அமைக்கப் பட்டுள்ள காய்கறிகள் சேமிப்பு மையத்தினை நேற்று ஆந்திரா மாநில உணவுத்துறை மந்திரி பிரிட்டாளா சுனித்தா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் அங்கிருந்த வேளாண்மை மற்றும் தோட் டக்கலை துறை அதிகாரி களிடம் காய்கறிகள் சேமிப்பு மையம் எவ்வாறு செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் விவசாயிகளுக்கு எந்த மாதிரியான நன்மைகள் கிடைக்கின்றன என்பது பற்றி கேட்டறிந்தார். தொடர்ந்து அவர், காய் கறிகள் சேமிப்பு மையம் மூலம் பயன்பெறும் விவசாயி களையும் சந்தித்து இத்திட்டம் குறித்து கேட்டறிந்தார். அப் போது அவரிடம் விவசாயிகள் கூறுகையில், சேமிப்பு மையத் தில் இருந்து அரசு நேரடியாக எங்களது காய்கறிகளை கொள் முதல் செய்து வருகின்றது. இதன் மூலம் இடைத்தரகர்கள் இன்றி சந்தைவிலைக்கே எங்களது காய்கறிகள் கொள் முதல் செய்யப்படுகின்றன. இதனால் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கின்றது. எனினும் தற்போது குறைந்த அளவு மட்டுமே எங்களிடம் இருந்து காய்கறிகளை அதிகாரி கள் வாங்கி செல்கின்றனர் என்று கூறினர். பாராட்டு அதன் பின்னர் மந்திரி பிரிட்டாளா சுனித்தா, விவசாயிகள் காய்கறிகள் பயிர் செய்துள்ள தோட்டத் தினையும் பார்வையிட்டார். அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறுகையில், இந்த சிறப்பு வாய்ந்த திட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். காய்கறிகள் சேமிப்பு மைய திட்டத்தினை எங்களது ஆந்திரா மாநிலத் திலும் செயல்படுத்துவது தொடர்பாக நான் ஆய்வு மேற்கொண்டேன். இது குறித்த தகவல்கள் ஆந்திரா மாநில முதல்-அமைச்சர் சந்திரபாபு நாயுடுவிற்கு தெரிவித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இந்த ஆய்வின் போது ஆந்திர மாநில உயர் அதிகாரி களான உணவுத்துறை இயக்குனர் ரவிபாபு, தோட்டக்கலை துறை இயக்குனர் பாப்பிரெட்டி, உணவுத்துறை பொது மேலாளர் ராஜிசர்மா மற்றும் விழுப்புரம் மாவட்ட கலெக்டர் சம்பத், திண்டிவனம் உதவி கலெக்டர் ஜெயச் சந்திரன், கூடுதல் பதிவாளர் வில்வசேகரன், மேலாண்மை இணை பதிவாளர் பாலகிருஷ் ணன், மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் ராமச் சந்திரன், தோட்டக்கலைத் துறை அதிகாரி காரல்மார்க் உள்பட பலர் உடனிருந்தனர்.

## விவசாயத்தில் அறிவியல் ஆராய்ச்சிகள்

இந்தியாவில் உணவு பணவீக்கம் அதிகமாகிக்கொண்டேபோகிறது. அதிலும், கடந்த சில மாதங்களுக்கு முன்பு 'எல்நினோ' புயல் பாதிப்பு வரப்போகிறது, தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு குறைவாகத்தான் பெய்யப்போகிறது என்ற அபாய சங்கு ஊதப்பட்டவுடன், உணவு பொருட்களின் விலையெல்லாம் மளமளவென்று உயரத்தொடங்கியது. நல்லவேளையாக இந்த அபாயம் இப்போது நீங்கியுள்ளது. மற்ற எல்லா பொருட்களையும்விட காய்கறி விலை குறிப்பாக வெங்காயம், தக்காளி விலை விண்ணைத் தொட்டுக் கொண்டிருக்கிறது. சென்னையில் பல ஓட்டல்களில் அபரிமிதமான விலை உயர்வு காரணமாக தக்காளி சட்னி இல்லை என்று போர்டே வைக்கப்பட்டுள்ளது. இந்தமாத தொடக்கத்தில் கிலோ 15 ரூபாய்க்கும் கீழே இருந்த தக்காளியின் விலை, தற்போது 70 ரூபாயை எட்டிக்கொண்டிருக்கிறது. அதுபோல, பெரிய வெங்காயம் 40 ரூபாய், சின்ன வெங்காயம் 30 ரூபாய், பச்சை மிளகாய் 60 ரூபாய் என்று ஏழை–எளிய, நடுத்தர மக்களின் வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டே போய்விட்டது. இதற்கு காரணம் சரியான திட்டமிடுதல் இல்லை என்பதுதான். வெங்காயம், தக்காளி இரு பொருட்களுமே சாகுபடி தொடங்கி, ஏறத்தாழ 4 மாதங்களுக்குள் அறுவடை செய்யக்கூடியதாகும் தக்காளி, வெங்காயம் இரண்டுமே பயிரிடப்பட வேண்டிய காலம் இது. பொருளாதாரத்தில் 'டிமாண்ட் அண்டு சப்ளை' அதாவது தேவை, அளிப்பு விகிதத்தை குறிப்பிடுவார்கள். அந்த அளவுக்கு மக்களின் தேவை எவ்வளவு இருக்கும் என்று கணக்கிட்டு, அதற்கேற்ற வகையில் விவசாயிகள் சாகுபடி செய்யும் அளவில் விவசாயத்துறையும், தோட்டக் கலைத்துறையும் நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில், தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய் எல்லாமே வெளிமாநிலங்களில் இருந்துதான் எதிர்பார்க்க வேண்டியது இருக்கிறது. இவைகளை தமிழ்நாட்டிலேயே இன்னும் அதிகமாக சாகுபடி செய்யலாம். அதற்கேற்ற வகையில் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். சீனா விவசாயத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே தன்னிறைவு பெற்று வருகிறது. இதற்கு காரணம் அவர்கள் விவசாயத்தில்

அறிவியல் தொழில்நுட்பங்களை பின்பற்றிவருவதுதான். 1990–ம் ஆண்டு சீனா சென்ற ‘தினத்தந்தி’ செய்தியாளர், அங்கு ஒரு விவசாய பண்ணைக்கு சென்ற நேரத்தில், அப்போதே பசுமை குடில்கள் அதாவது ஒரு கூடாரம்போல அமைத்து, அனைத்து காய்கறிகளையும் சாகுபடி செய்வதை காட்டினார்கள். அப்போது அங்குள்ள விவசாய அதிகாரிகள் உங்கள் நாட்டில் ஒவ்வொரு காய்கறியும் அதற்கான தட்பவெட்ப காலத்தில்தான் சாகுபடி செய்து அறுவடை செய்யப்படுகிறது. ஆனால், இந்த முறையில் கூடாரத்துக்குள் தேவையான வெப்பம் மற்றும் தண்ணீர் வசதிகளை நாங்கள் பம்ப் செய்வதால் ஆண்டு முழுவதும் இந்த காய்கறிகளை விளைவித்து மகசூலை அறுவடை செய்ய முடிகிறது என்று காட்டினர். இப்போது அதுபோன்ற முயற்சிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வித்திட்டுள்ளார். இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சில் கூட்டத்தில் அவர் பேசும்போது, விவசாயத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும், குறைந்த நிலம்–குறைந்த நேரம்–அதிக மகசூல் என்பதையும், ஒவ்வொரு சொட்டு தண்ணீருக்கும் அதிக பயிர்விளைச்சல் என்பதையுமே வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சில் தனது தாரக மந்திரமாகக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். விவசாயிகள் தங்கள் நிலங்களில் வித்தியாசமான பயிர்களை சாகுபடி செய்யவும், புதிய சாகுபடி முறைகளை மேற்கொள்ளவும், ஏற்றவகையில் புதிய உத்திகளை ஆராய்ச்சி செய்து, அதை அவர்கள் நடைமுறைக்கு கொண்டுவர புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துச்செல்ல வேண்டும், ஆய்வகங்களில் இருந்து விளை நிலத்துக்கு என்ற வகையில் வேளாண்மை ஆராய்ச்சிகள் நடக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார். இதெல்லாம் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. இந்தியாவில் உள்ள விவசாயிகளெல்லாம் பெரிய பண்ணைகளை வைத்திருப்பதில்லை. சிறிய அளவில்தான் நிலம் வைத்திருப்பார்கள். அவர்களெல்லாம் இத்தகைய நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டுமானால், அவர்களால் அந்த பொருட்செலவை ஏற்றுக் கொள்ளமுடியாது. எனவே, வழியை காட்டும் பிரதமரும், விஞ்ஞானிகளும் அதற்கேற்ற வசதிகளையும், கருவிகளையும், இடுபொருட்களையும் விவசாயிகளுக்கு வழங்கினால்தான், இதெல்லாம் நடைமுறைக்கு வரும்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெங்காய விலை உயர்வு: பேரவையில் ருசிகர விவாதம்



வெங்காயம் உள்ளிட்ட காய்கறி விலை உயர்வு தொடர்பாக பேரவையில் ருசிகர விவாதம் நடந்தது. சட்டப்பேரவையில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது வியாழக்கிழமை நடந்த விவாதம் வருமாறு: **சேகர் (தேமுதிக):** காய்கறி விலை உயர்வு காரணமாக வெங்காயம், வெண்டக்காய், சுண்டக்காய் இல்லாமல் சாம்பார் வைப்பது எப்படி என்று இல்லத்தரசிகள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது, அவையில் உள்ள பெண் உறுப்பினர்களுக்கும் தெரியும்.

**அமைச்சர் பா.வளர்மதி:** உறுப்பினர் வீட்டில் ஆராய்ச்சி செய்து விட்டுத்தான் சமையல் செய்கிறார்களா என்பதை தெரிவிக்க வேண்டும்.

**அமைச்சர் செல்லூர் ராஜூ:** கடந்த திமுக ஆட்சியில்தான் வெங்காய விலை உயர்வாக இருந்தது. இப்போது அவ்வாறு இல்லை.

**சவுந்தரராஜன் (மார்க்சிஸ்ட்):** விலை உயர்வு காரணமாக எங்கள் வீட்டில் சாம்பார் செய்யும்போது 10 வெங்காயத்துக்குப் பதிலாக 5 வெங்காயம்தான் போடுகிறார்கள். கடந்த ஆட்சியில் வெங்காய விலை உயர்வு இருந்தது. இப்போது இல்லை என்று அமைச்சர் சொல்வது உண்மைக்கு மாறான தகவல்.**பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** தமிழகத்தில் வறட்சி நிலவுகிறது. அமைச்சர் உதயகுமார்: நாடு செழிப்பாக இருக்கிறது. மழை பெய்து அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் தேவைக்காக கூடுதலாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணைகளில் உள்ள நீர் இருப்பு, மழை அளவு ஆகியவற்றை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. வறட்சியால் பயிருக்கு இழப்பீடு தரும் நிலை தற்போது இல்லை. எனவே, இல்லாத ஒன்று இருப்பதுபோல உறுப்பினர்

பேச வேண்டாம். **பாலகிருஷ்ணன்:** காய்கறிகளின் விலை அதிகமாக உள்ளது. அமைச்சர் செல்லூர் ராஜு: கடந்த ஆட்சியில் காய்கறிகள் பற்றாக்குறை இருந்தது. காய்கறிகள் விலை உயர்வை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. ஆனால், காய்கறிகள் விலையைக் கட்டுப்படுத்த முதல்வர் ரூ.100 கோடி ஒதுக்கினார். மகாராஷ்டிரா, ஆந்திராவில் இருந்து வெங்காயம் வரவழைக்கப்பட்டது. அதனால் வெங்காய விலை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. வெங்காய உற்பத்தி செய்யும் விவசாயிகள் 5 ஆயிரம் பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. பண்ணை பசுமைக் கடைகளில் விற்கப்படும் காய்கறிகள், இடைத்தரகர் இல்லாமல் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக வாங்கப்படுகிறது. இவ்வாறு விவாதம் நடந்தது.

## சென்னையில் விவசாயிகள் மாளிகை: பேரவையில் மார்க்சிஸ்ட் கோரிக்கை

‘தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் விவசாயிகள் தங்குவதற்கு, சென்னையில் விவசாயிகள் மாளிகை அமைக்கப்பட வேண்டும்’’ என்று மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. சட்டப்பேரவையில் வியாழக் கிழமை நடைபெற்ற வேளாண் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் விவரம் வருமாறு: **பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னைக்கு விவசாயிகள் வருகின்றனர். அவர்கள் தங்குவதற்கு இங்கு இடவசதி இல்லை. மற்ற மாநிலங்களில், தலைநகரங்களுக்கு வரும் விவசாயிகள் தங்க ‘கிசான் பவன்’ அமைக்கப்பட்டுள்ளதைப் போல் சென்னையிலும் ‘விவசாயிகள் மாளிகை’ அமைப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். **குணசேகரன் (இந்திய கம்யூனிஸ்ட்):** வேளாண் துறையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அத்துறைக்கு தனி பட்ஜெட் போட்டு நாட்டிலேயே தமிழக அரசு முன்னுதாரணமாக விளங்க வேண்டும். மானாவாரி விவசாயிகளுக்குச் சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

**அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி**: மானாவாரி விவசாயிகளுக்குச் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இரண்டு மடங்கு உற்பத்திப் பெருக்கம், 3 மடங்கு வருமானம் அதிகரிப்பு என பயிரிடும் பரப்பை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**குணசேகரன்:** இங்கு நெல், கரும்புக்கு மட்டும் ஆதார விலை தரப்படுகிறது. ஐரோப்பாவில் உள்ளது போல் அனைத்துப் பயிர்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டும். மரம் வளர்ப்போருக்கு மானியம் தர வேண்டும்.

**அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன்:** தமிழகத்தில் ஆண்டுக்கு 66 லட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. தேவைப்படுவோர் கேட்டால் மரக்கன்றுகள் வழங்கப்படும்.

**குணசேகரன்:** மரங்களை வளர்க்க முன்வருவோருக்கு மானியம் தந்து ஊக்குவிக்க வேண்டும் என்றுதான் கேட்டேன். வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மதுரை மல்லிக்கு புவிசார் குறியீடு அந்தஸ்து கிடைத்தது போல், 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிரிடப்படும் குண்டு மிளகாய்க்கும் புவிசார் குறியீடு கிடைக்க நடவடிக்கை எடுத்தால், இத்தொழிலை நம்பி வாழும் விவசாயிகள் வாழ்வு செழிக்கும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**<u>விவசாயிகளை களப்பணியாளர்கள் நேரடியாக சந்திக்க நடவடிக்கை: அமைச்சர்</u>**

தமிழகத்தில் விவசாயிகளை வேளாண் துறை களப்பணியாளர்கள் நேரடியாக சென்று சந்திப்பதற்கான சூழல் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். சட்டப்பேரவையில் வியாழக்கிழமை நடந்த வேளாண்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். விவாதம் விவரம் வருமாறு: என்.ஆர்.ரங்கராஜன் (காங்கிரஸ்): நிலத்தடி நீர் பிரச்சினையை சமாளிக்க ஏதுவாக, அதிக சக்தி கொண்ட மோட்டார் பம்ப் செட்களை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். டெல்டா பகுதிகளில் சூரிய மின்சக்தி மோட்டார் பம்ப்செட்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.அமைச்சர் கிருஷ்ணமூர்த்தி: 5 குதிரை சக்தித் திறன் கொண்ட 2 ஆயிரம் மோட்டார்களை வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.ரங்கராஜன்: யூரியா, டிஏபி ஆகிய உரங்களின் விலை கடுமையாக அதிகரித்து வருகிறது. அதைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலத்தடி நீர்மட்டத்தை பாதிக்கும் சீமை கருவேல மரங்களை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் துறையை மறுசீரமைக்க வேண்டும். அமைச்சர் கிருஷ்ணமூர்த்தி: வேளாண்துறையை கடந்த திமுக ஆட்சி சீரழித்துவிட்டது. அத்துறையை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. விவசாயிகளை வேளாண் துறை களப்பணியாளர்கள் நேரடியாக சந்திக்கும் சூழலை அரசு ஏற்படுத்தும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நீர்வளப் பாதுகாப்புக்கு நடவடிக்கை: வேளாண் அமைச்சர் அறிவிப்பு

‘‘தமிழகத்தில் நீர்வளப் பாதுகாப்புக்கு ரூ.13 கோடி செலவிடப்படும். ஆயிரம் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் புனரமைக்கப்படும்’’ என்று வேளாண் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறினார். சட்டப்பேரவையில் வேளாண் துறை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வியாழக்கிழமை வெளியிட்ட புதிய அறிவிப்புகள் வருமாறு: உயர்தொழில்நுட்ப சாகுபடி முறைகளை மாதிரி பண்ணை அமைத்து விவசாயிகளுக்கு விளக் கும் வகையில் வெப்ப மண்டல பழ வகைகளுக்கான மகத்துவ மையம், திருச்சி மாவட்டம் ரங்கத்திலும், மலைத்தோட்ட காய்கறிகளுக்கான மகத்துவ மையம் ஊட்டியிலும் ரூ.9 கோடியில் அமைக்கப்படும். நீர்வளப் பாதுகாப்பை மேம்படுத்தி வேளாண் உற்பத்தியை உயர்த்த கருமண் அதிகம் காணப்படும் 7 மாவட்டங்களில் மண் அரிப்பைத் தடுத்து, மண் ஈரத்தை மேம்படுத்தும் வகையில் பகுதி வரப்புகள் ரூ.13.47 கோடியில் அமைக்கப்படும். இயந்திரங்களை வாடகைக்கு விடுவதற்காக 18 மாதிரி தொழில் முனைவோர் மையங்கள், ரூ.9.98 கோடியில் அமைக்கப்படும். விவசாயத்துக்கு அடிப்படை ஆதாரமான நீர்வளத்தைக் குறிப்பாக நிலத்தடி நீர்வளத்தை அதிகரிக்க, 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 1000 மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ரூ.3 கோடியில் புனரமைத்து நீர் சேமிப்புத் திறன் மேம்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூ.4 கோடியில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும். ராமநாதபுரம் மாவட்டம் ஓரியூரில் ரூ.2.698 கோடியில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்கப்படும். இவ்வாறு அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கூறினார்.